# துதியும் ஆராதனையும்

**துதி** என்ற வார்த்தைக்கான அர்த்தங்கள்: புகழ்ச்சி, பாராட்டு, புகழ்தல், புகழ், மெச்சு, போற்று, பராவு, துதி. ஒருவரது தகுதியை புகழ்ச்சியை வெளிப்படுத்துவது. புகழ்வது. பக்தியை வெளிப்படுத்துவது. தேவனை மகிமைப்படுத்துவது.

**பழைய ஏற்பாட்டில் துதிக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ள எபிரேய வார்த்தைகளும் அவற்றின் அர்த்தங்களும்.**

1. **" ஹலால் ".** துதிப்பது, கொண்டாடுவது, மகிமை, பாடுவது, பெருமைப்படுத்துவது. **கட்டுப்பாடு இல்லாமல் துதிப்பது.** அல்லேலூயா என்ற வார்த்தையில் மூல வார்த்தை இதுவே. ( Halal.....Hallelujah ). அல்லேலூயா என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் **" நாம் தேவனை துதிப்போம் ".**
2. **" யாடா ".** நன்றியறிவித்தல். ஸ்தோத்தரித்தல். புகழ்தல். சுமார் 120 முறை எபிரேய வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. **கைகளை உயர்த்தி பக்தியோடு ஸ்தோத்தரிப்பது.**
3. **" டெஹிலா "** மகிமை. துதி. துதிப்பாடல். 57 முறை காணப்படுகிறது. **ஆவிக்குரிய பாடல்களை பாடுவது.**
4. **" டோடா ".** ஸ்தோத்தரித்தல். நன்றியறிவித்தல். 30 முறை காணப்படுகிறது. **நன்றி பலிகள்.**

**புதிய ஏற்பாட்டில் துதிக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகளும் அவற்றின் அர்த்தங்களும்.**

பெயர்சொற்கள்;

1. **" ஐனோஸ் ".** தேவனுக்கு துதி. ஒரு கதை.
2. **" இபைனோஸ் ".** புகழ்ச்சி, துதி, முக்கியமாக வைப்பது.
3. **" ஐனெஸிஸ் ".** நன்றி பலி.

**வினைச்சொற்கள்;**

1. **" ஐனோ ".** புகழ்ந்து சொல்லுவது. புகழ்வது.
2. **" இபைனோ ".** துதி.
3. **" ஹுூம்னோ ".** பாடுவது,
4. **" ப்சலொ ".** ஒரு கம்பி இசைக்கருவியை மீட்டுவது.
5. **" இக்ஸ்மொலொஜியோ".** நான் துதிப்பேன்.

**ஆராதனை** என்ற வார்த்தைக்கான அர்த்தங்கள்: வழிபாடு, வணக்கம், பூசனை, போற்றரவு, மதிப்பார்வம், திருமுன், வழிபடு, தொழு, வணங்கு, மதித்தாதரி, பூசித்துபோற்று. நமஸ்கரித்தல். ஆராதனை.

**பழைய ஏற்பாட்டி "ஆராதனை"க்கான எபிரேய வார்த்தைகள்.**

**" ஷாகா ".** நமஸ்கரித்தல். தொழுதுகொள்ளுதல். பணிந்து ஆராதனை செய்தல்.

**புதிய ஏற்பாட்டில் "ஆராதனை"க்கான கிரேக்க வார்த்தைகள்.**

1. **"ப்ரோஸ்குனோ ".** பணிந்து கொள்ளுதல். பூஜித்தல்.
2. **" செபொமை ".** பூஜிப்பது. பக்திபூர்வமாக பூஜிப்பது.
3. **" செபஸோமை ".** மதசம்பிரதாயமாக மதிப்பது.
4. **" லற்றயோ ".** சேவித்தல்.
5. **" யுசெபோ ".** தெய்வபக்தியோடு இருத்தல்
6. **" செபஸ்மோ ".** ஆராதனை செய்யப்படும் பொருள்.

**குறிப்பு;** வேதாகமத்தில் ஆராதனை என்பது ஒரு இடத்திலும் வரையறுத்து கூறப்படவில்லை. மேலே குறிப்பிடப் பட்டுள்ள எல்லா சொற்களையும் சேர்த்து இவ்வாறாக கூறலாம், " தேவனுடைய குணம், நலன்கள், வழிகளை நேரிடையாக ஏற்றுக்கொண்டு அதை இருதயத்தின் வெளிப்பாடாகவோ ஒரு செய்கையாகவோ காண்பிப்பது. "

துதி; **தேவனுடைய மகத்துவத்தை புரிந்து கொண்டு மகிமைப்படுத்தி மெச்சுதல்.**
ஆராதனை; **முழு தாழ்மையோடு தேவனோடு தொடர்பு கொண்டு மதித்து அவரை பணிந்து கொள்ளுதல்.**

## தேவனுக்கு விருப்பமான சூழ்நிலையும், தேவன் விரும்புவதும் துதி

***சங் 22:3*** *இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.*
***வெளி 4:8*** *அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. 9 மேலும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடி ருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது, 10 இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: 11 கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக் கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.*

பரலோகத்தில், இரவும் பகலும் தொடர்ச்சியாக துதி செலுத்தப்படுகிறது.

## தேவன் மாத்திரமே துதிக்கும் ஆராதனைக்கும் பாத்திரர்

***மத் 4:10*** *அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.*
***மத் 8:2*** *அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.*

ஆராதனை தேவனுக்கு மாத்திரமே செய்யப்பட வேண்டும் *( மத் 4:10 ).* தேவ தூதர்கள் ஆராதனையை ஏற்றுக் கொள்வது இல்லை *( வெளி 19:10; 22:8-9 ).* மனிதர்கள் ஆராதனையை ஏற்றுக்கொள்ள வில்லை *( அப் 10:25-*

*26; 14:11-18).* வேதாகமத்தில் இயேசுவுக்கு ஆராதனை செய்யப்பட்டதாக 11 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. *( மத் 2:2; 8:2; 9:18; 14:13; 15:25; 20:20; 28:9,17; மாற்கு 5:6; லூக்கா 24:52; யோவான் 9:38 ).*

*சங் 107:9 அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.*

## கர்த்தருக்கு ஊழியம் செய்தல்

*அப் 13:2 அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.*

கர்த்தருக்கு ஆராதனை செய்வதை, கர்த்தருக்கு ஊழியம் செய்வது ( ministering ) என்று ஆங்கில வேதாகமம் சொல்லுகிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்வது எப்படி? அவரது தேவைகள் என்ன? தேவன் அவரது மகிழ்ச்சிக் காக சகலத்தையும் சிருஷ்டித்தார் ***( வெளி 4:11 ).*** நம்மையும் கூட அவ்வாறே சிருஷ்டித்தார். மனிதன் தேவனோடு உறவு உள்ளவனாக இருப்பதற்கே சிருஷ்டிக்கப்பட்டான். மனிதனின் பாவம் அவனை தேவனோடு உறவு கொள்வதை கைவிடுமாறு செய்தது. ஆனால் இயேசு நம் பாவங்களுக்கான தண்டனையை செலுத்தி மீண்டும் மனிதன் தன் சிருஷ்டிகரோடு நல்ல உறவு நிலையில் இருக்குமாறு செய்தார் ***( 2 கொரி 5:18 ).*** **நாம் துதி ஆராதனை மூலமாக நம்முடைய அன்பை தேவனுக்கு கொடுக்கும்போது, நாம் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று அர்த்தம்.** நாம் தேவன் மேல் நமக்குள்ள அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார். லேவியராகிய ஆசாரியக்கூட்டம் தேவனுக்கு ஊழியம் செய்தது ***( எண் 3:4; உபா 10:6; 1 சாமு 3:1; 1 நாளா 6:32; எபி 10:11 ).*** பேதுருவின் மாமியார், இயேசுவுக்கு ஆகாரம் கொடுத்தது, அவரது கால்களை கழுவியது போன்றவற்றின் மூலமாக அவருக்கு ஊழியம் செய்தார். ***( மத் 8:15; மாற்கு 1:31; லூக்கா 4:39 ).*** பெண்கள் பலர் இயேசுவுக்கு பணம் கொடுத்ததன் மூலமாக அவருக்கு ஊழியம் செய்தனர். ***( லூக்கா 8:3 ).*** பரலோகத்தில் ஆயிரக்கணக்கான தூதர்கள் துதி ஆராதனை மூலமாக தேவனுக்கு ஊழியம் செய்கிறார்கள் ***( தானி 7:10 ).*** அந்தியோக்கியாவில் இந்த தீர்க்கதரிசிகளும் உபதேசிக்கிறவர்களும், தங்களுடைய துதி ஆராதனை மூலமாக தேவனுக்கு ஊழியம் செய்தனர். தேவனை ஆசீர்வதிக்க வேண்டும் ( ஆங்கில வேதாகமம் ) என்று வேதாகமம் சொல்லும்போது ***( சங் 34:1;134:1-3 ),*** 'தேவனே உம்மை ஆசீர்வதிக்கிறேன்" என்று மாத்திரம் சொன்னால் போதாது. தமிழ் வேதாகமம் சொல்லுகிறது போல நம்முடைய அன்பையும் நன்றியையும் துதியின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும். அது தேவனை ஆசிர்வதிப்பதாகும்.

## தேவனை யார் துதிப்பார்கள்? யாரால் தேவனை துதிக்க முடியும் ?

தாவீது. தாவீது கொடிய பாவங்கள், கொலை, தவறுகள் செய்த போதிலும், வேதவசனங்கள் ***( 1 சாமு 13:14, அப் 13:22 )*** தாவீதை **" தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன் "** என்று அழைக்கின்றன. இதற்கான ஒரு காரணம் ***2 சாமுவேல் 6*** ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒபேத் எதோமின் வீட்டில் இருந்து, தாவீதின் நகரத்துக்கு, கர்த்தருடைய பெட்டியை தாவீது கொண்டு வருகிறார். மிகுந்த ஆனந்தத்துடனும், சந்தோஷத்துடனும் ஊர்வலமாக கர்த்தருடைய பெட்டி கொண்டு வரப்படுகிறது. 18 அடிக்கு ஒரு முறை பலிகள் செலுத்தப்படுகிறது.

*2சாமு 6:14 தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப்பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான். 15 அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டுவந்தார்கள். 16 கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணி வழியாகப் பார்த்து, தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம்பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்தலிலே அவனை அவமதித்தாள்.*

*20 தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள். 21 அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து:* ***உன் தகப்பனைப் பார்க்கிலும் அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். 22 இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்; அப்படியே நீ சென்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.*** *23 அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.*

"தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்" என்ற பெயர் தாவீதுக்கு கிடைப்பதற்கான ஒரு முக்கிய காரணம், தாவீதின் இந்த மனப்பாங்கு. இதுதான் அவரை தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாக ஆக்கியது. தாவீது தன் தேவனை அறிந்தவர். ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை, உலகத்தின் மகாப்பெரிய ஒரு ராஜாவாக, தேவன் ஆக்கியதற்கு இது ஒரு மகத்தான காரணம்.

ஆராதனை வேளைகளில் சத்தமிட்டு, நடனமாடி துதிப்பது எனது அந்தஸ்துக்கு ( **status** ) உகந்தது அல்ல என்று நினைப்பவர்களும், நான் சத்தமிட்டு நடனமாடி துதித்தால் என் மனைவி, குடும்பத்தார், உடன் வேலை செய்பவர்கள், நண்பர் கூட்டம், சமூகம், என் சபை என்னை கேவலமாக பார்க்கும் என்று நினைப்பவர்களும் இந்த பகுதி மூலமாக பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

சபைகளில் வல்லமையாக துதித்து ஆராதிப்பவர்களை கிண்டல் செய்பவர்கள், சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு சம்பவித்ததை நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.

*1நாளா 23:5 நாலாயிரம்பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்றும், துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம்பேர் கர்த்தரைத் துதிக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்றும் தாவீது சொல்லி,*

புதிய ஏற்பாட்டில் நாமே தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம். ஆதலால் அங்கு துதி தொடர்ந்து ஏறெடுக்கப்பட வேண்டும்.

*சங் 22:23 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.*

உண்மையிலேயே தேவன் மேல் மரியாதை கலந்த பயம் உள்ளவர்கள் அவரை துதிப்பார்கள். தேவன், ஐஸ்கிரீமின் மேல் இருக்கிற அழகு கிரீம் அல்ல, அவரே வாழ்க்கையின் சகலமும் என்று அவர்கள் புரிந்து கொண்டிருந்தால் அவரை துதிப்பார்கள். ஆபிரகாமின் சந்ததி, யாக்கோபின் சந்ததி, இஸ்ரவேலின் சந்ததி போன்ற வார்த்தைகள் அனைத்தும், " இயேசுவுக்குள் இருக்கிற மறுபடியும் பிறந்த விசுவாசிகளை " குறிப்பிடுவதாகும். *( கலா 3:7, 16, 29 ).* **ஆதலால் உண்மையிலேயே மறுபடியும் பிறந்து, 'இயேசுவுக்குள் தாங்கள் யார்' என்று மனதிலாக்கி இருக்கிற விசுவாசிகள் அனைவரும் தேவனை துதிப்பார்கள், அவரை மகிமைப்படுத்துவார்கள்.**

*சங் 22:26 சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள், உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.*

கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரை துதிப்பார்கள். இதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது. நாம் தேவனை துதிக்கிறோம் என்றால் அவரைத்தேடுகிறோம் என்று அர்த்தம். தேவனைத்துதிப்பது நம்முடைய ஆவிக்குரிய, பௌதீக இருதயத்துக்கு நல்லதாகும். ஒரு நல்லவிதமான ஆரோக்கியமான ஆவிக்குரிய, பௌதீக வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள் தேவனை துதிக்க வேண்டும்.

*சங் 50:23 ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்.*

தேவனை துதிப்பது அவரை மகிமைப்படுத்துகிறது. மகிமைப்படுத்துவது என்றால், மிக உயர்வாக, கண்ணியமாக, மகிமையாக வைப்பது. கண்ணியப்படுத்துவது என்றால் மிக உயர்ந்த மதிப்பு கொடுப்பது, மதிப்பது, விலை மதிப் பற் றவராக கருதுவது. *ரோமர் 1:21* ல் 'மகிமைப்படுத்துவது' என்பதற்கான எபிரேய வார்த்தை, *ரோமர் 11:14* ல் 'மேன்மைப்படுத்துவது' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தேவனை துதிப்பது, நம்முடைய இருத யங்களிலும் மனங்களிலும் அவரை மேன்மைப்படுத்துகிறது ( பெரிதாக்குகிறது ). தேவனை துதியின் மூலமாக மகிமைப்படுத்துகிறவர்கள் அவரது இரட்சிப்பை காண்பார்கள். மகிமைப்படுத்துவது என்ற வார்த்தை *நீதி 3:9* ல் 'கனப்படுத்துவது' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே தேவனை துதிப்பது அவரை கனம் பண்ணுகிறதாக இருக்கிறது.

*சங் 150:6 சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா.*

நாம் சுவாசித்துக்கொண்டிருக்கிறோம் என்றால், அது தேவனை துதிப்பதற்கான ஒரு நல்ல காரணம் ஆகும். நாம் வாழ்வதற்கான மூல காரணம் தேவன். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் நிச்சயம் தேவனை துதிப்பார்கள். ஒரு மணிக்கூர், ஒரு நாள், ஒரு வருடம் கூடுதல் சுவாசிப்பதற்காக பல ஆயிரக்கணக்கான மக்கள் எதையும் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். இதை பார்க்கும்போது, நம்முடைய சுவாசம் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பதை நாம் அறியலாம். நம்முடைய சுவாசத்தை தேவனை துதிப்பதற்காக உபயோகித்து, நாம் வாழுவதற்காகவும் அதை உபயோகிக்கலாம்.

*ஏசா 43:21 இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.*

இன்று ' இந்த ஜனம் ' என்பது இயேசுவின் சபையை குறிக்கிறது. நம்மை குறிக்கிறது. நாம் தேவனை துதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள்.

*1 Peter 2:9 But ye are a chosen generation, a royal priesthood, an holy nation, a peculiar people; that ye should shew forth the praises of him who hath called you out of darkness into his marvellous light:*

## விலை கொடுத்து வாங்கப்பட்டவர்கள் தேவனை துதிப்பார்கள்

*1கொரி 6:20 கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

*1கொரி 7:23 நீங்கள் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்.*

*1பேது 1:18 உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், 19 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*

நம்முடைய ஆவி, தேவனிடம் இருந்து கிடைத்த ஜீவ சுவாசம். நம்முடைய சரீரம் தேவனால் உருவாக்கப்பட்டது. ஆனால் நாம் நம்மை பிசாசுக்கு அடிமைகளாக விற்று விட்டோம். ஆனால் மீண்டும் தேவன் நம்மை இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கு வாங்கினார். மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் இரத்தம் அது. ஆகவே, இந்த மகாப்பெரிய விலையை கொடுத்த தேவனை துதிக்க வேண்டும்.

## எல்லோரும் தேவனை துதிக்க வேண்டும்

*சங் 117:1 ஜாதிகளே, எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.*

*2 அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா.*

தேவன் நம்மேல் வைத்த கிருபைக்காக எல்லா ஜனங்களும், மக்களும் தேவனை துதிக்க வேண்டும்.

### தேவனை அறிந்தவர்களால் மாத்திரமே அவரை துதிக்க முடியும்

*சங் 119:7 உம்முடைய நீதிநியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்.*

தேவனை அறிய வேண்டுமென்றால் அவரது வார்த்தைகளை கற்று அறிந்து கொள்ள வேண்டும். அப்படி தேவனுடைய வார்த்தையை கற்று, அவரை அறிந்து கொண்டவர்கள் மாத்திரமே தேவனை துதிக்க முடியும்.

**உங்களுக்கு தெரியாத ஒருவரை நீங்கள் துதிக்க முடியாது.**
**ஒருவரை உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு துதிக்க முடியும்.**
நீங்கள் எப்படி தேவனை துதிக்கிறீர்கள் என்பது நீங்கள் தேவனை எவ்வளவு அறிந்திருக்கிறீர்கள் என்பதை பொறுத்து இருக்கும்.

### நம் எதிரிக்கு எதிரான ஒரு வல்லமையான ஆயுதம் ' துதி '

யூதாவின் ராஜாவாகிய யோசபாத், தேவனுக்கு பயப்படுகிற மனிதனாக இருந்தான். மோவாபியரும், அம்மோனியரும், மற்றசிலரும் யூதாவோடு யுத்தம் பண்ண வந்தார்கள். *2நாளா 20:14 அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தனியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னது: 15 சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. 16 நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள். 17 இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான். 18 அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள். 19 கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள்.*

கர்த்தருடைய ஆவி கூட்டத்தில் வந்த போது, ஜனங்கள் தீர்க்க தரிசனத்தை கேட்ட போது, அவர்கள் விசுவாசத்தை காண்பித்தார்கள். அதனுடைய விளைவு - துதித்தலும் ஆராதித்தலும். உண்மையான விசுவாசம் எப்போதும் துதியை உருவாக்கும். துதி இல்லை = உண்மையான விசுவாசம் இல்லை. துதி என்னும் பதில் செய்கை இல்லாமல் யாராலும் அவர்கள் வேண்டிக்கொள்வதன் வெளிப்பாடை காண முடியாது. விசுவாசம் முழுமையடையும்போது, அதன் விளைவு துதியாகத்தான் எப்போதும் இருக்கும். ஆகவே நம்முடைய இருதயங்களில் உண்மையான துதி இல்லாவிட்டால், அது நம்முடைய விசுவாசம் முழுமையாக இல்லை அல்லது பூரணமாக இல்லை என்பதையே காண்பிக்கிறது.

*2நாளா 20:21 பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான். 22 அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்.*

அவர்கள் பாடித்துதி செய்யத் தொடங்கின போது, தேவனுடைய விடுதலை நடந்தது. துதி ஒரு வல்லமையான ஆயுதம். சாத்தானால் அதை புரிந்து கொள்ளவோ அதற்கு எதிர் நிற்கவோ முடியாது. பகைஞரையும் பழிகாரனையும் அடக்குகிற வல்லமை - துதி, என்று *சங் 8:2, மத் 21:16* சொல்லுகிறது. *சங் 8:2 பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.*

*மத் 21:16 அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.*

*சங் 8:2* ஐ இயேசு *மத் 21:16* ல் குறிப்பிடுகிறார். ஆனால் தாவீது ' **பெலன்** ' என்று சொல்லியதை, இயேசு ' **துதி** ' என்று சொல்லுகிறார். ஆகவே பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போடும் பெலன் - துதி. ஆகவே நாம் இன்னும் அதிகமாக துதிக்க வேண்டும். இந்த துதி அல்லது பெலன் தேவனுடைய சத்துருக்களுக்கு எதிராக கிரியை செய்கிறது. அதன் மூலம் தேவன் பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போடுகிறார். ஆகவே, நம்முடைய எதிரியாகிய சாத்தானை அடக்க, துதியாகிய பெலனை, ஆவிக்குரிய யுத்தத்தில் உபயோகப்படுத்த வேண்டும் என்று இந்த வசனங்கள் மூலமாக நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். தேவனுக்கு செலுத்தப்படும் உண்மையான துதிக்கு முன்பதாக சாத்தானால் நிற்க முடியாது.

### வெற்றிக்கு முன்பும் பின்பும் தேவனை துதிக்க வேண்டும்

*2நாளா 20:24 யூதாமனுஷர் வனாந்தரத்திலுள்ள சாமக்கூட்டண்டையிலே வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்துகிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை.*

*2நாளா 20:26 நாலாம் நாளில் பெராக்காவிலே கூடினார்கள்; அங்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர் தரித்தார்கள்.*

**"பெராக்கா"** என்ற வார்த்தையின் அர்த்தம் ' துதி ' என்பதாகும். யுத்தத்துக்கு போகுமுன்பதாக மாத்திரம், இவர்கள் தேவனை துதிக்க வில்லை. யுத்தம் முடிந்து வெற்றி கிடைத்த பின்பும் இவர்கள் தேவனை துதித்தார்கள். சிலர் வெற்றிக்கு முன்பதாக தேவனை துதிப்பார்கள். சிலர் வெற்றிக்கு பின்பு தேவனை துதிப்பார்கள். ஆனால் உண்மையான விசுவாசம் உள்ளவர்கள் வெற்றிக்கு முன்பும், வெற்றிக்கு பின்பும் தேவனை துதிப்பார்கள்.

## நாம் தேவனை துதிக்கும்போது சாத்தானால் நிற்க முடியாது

*மத் 4:9 நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்*

*ஐசாயா 14:12-14* வசனங்களின் படி, சாத்தானை பாவம் செய்யும்படியாக தூண்டியது " பெருமை ". அவன் உன்னதமானவரைப்போல ஆக வேண்டும் என்று விரும்பினான். ஆராதனை, தேவனுக்காக மாத்திரமே உள்ளது. சாத்தான் எப்போதும் அதை விரும்பினான். ஆராதனை தனக்கு கொடுக்கப்படாத போது, ஆராதிப்பவர்கள் உன்னதமானவரை உண்மையாக ஆராதிப்பதில் இருந்து திசைதிருப்ப அவன் முயற்சிக்கிறான். இதை, விக்கிரக ஆராதனையான பொருளாசை *( கொலோ 3:5 )* போன்றவற்றின் மூலமாக செய்ய முயற்சிக்கிறான். இதனால்தான் துதியும் ஆராதனையும் சாத்தானுக்கு எதிரான ஒரு வல்லமையான ஆயுதமாக இருக்கிறது. தேவனுக்கு செலுத்தப்படும் ஆராதனைக்கு முன்பதாக சாத்தானால் நிற்க முடியாது.

## துதி மற்றவர்கள் காதுகளால் கேட்கும் படியாக இருப்பது

*சங் 66:8 ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள்.*

நம்முடைய துதி, மற்றவர்களால் கேட்க முடிகிறதாக இருக்க வேண்டும். அது நம்முடைய இருதயத்தில் தொடங்குகிறது, பின் அது நம் வாய் வழியாக வெளியே வர வேண்டும்.

*சங் 71:23 நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.*
கெம்பீரித்து என்ற வார்த்தையின் அர்த்தம் "ஆர்ப்பரிப்பது". தேவனை தான் சத்தமான ஆர்ப்பரிப்பான பாடல்களோடு துதிப்பேன் என்று தாவீது சொல்லுகிறார்.
*சங் 35:27 என் நீதிவிளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து, தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கடவர்கள்.*
*சங் 98:4 பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்; முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.*

நம்முடைய உள்ளில் என்ன நடக்கிறது என்பதை துதி வெளியே காட்டுகிறது.

## எப்போது துதிக்க வேண்டும்

*சங் 113:3 சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக. From the rising of the sun unto the going down of the same the LORD'S name is to be praised.* இதன் அர்த்தம் நாம் எப்போதும், எங்கும் தேவனை துதிக்க வேண்டும்.

*சங் 100:4 அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.*
நம்முடைய ஆலய ஆராதனைகளை துதியோடும் புகழ்ச்சியோடும் தொடங்க வேண்டும், என்ற அர்த்தத்தையும் இதில் இருந்து எடுத்துக்கொள்ளலாம். *மத் 6:9-13* ல் இயேசு கிறிஸ்து கற்பித்த கர்த்தருடைய ஜெபத்தில், நம்முடைய ஜெபங்களை புகழ்ச்சியோடும் துதியோடும் தொடங்க வேண்டும், புகழ்ச்சியோடும் துதியோடும் முடிக்க வேண்டும் என்று கற்பிக்கிறார்.

*சங் 63:4 என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.*

*சங் 134:2 உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.*

*1தீமோ 2:8 அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.*

நாம் தேவனை எவ்வளவாக பெரிதாக்குகிறோமோ, அதற்கு நேர் எதிர் விகிதத்தில் நம் பிரச்சினைகள் சிறிதாகும்.

*சங் 77:11 கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்;*
பல வேளைகளிலும் நம்மை சுற்றி எல்லாம் கவலையளிப்பதாக இருக்கலாம். ஆனாலும் அந்த சமயங்களில் எல்லாம், நாம் தேவனிடம் இருந்து முன்பு பெற்ற ஆசீர்வாதங்களை அல்லது தேவன் தந்திருக்கும் ஆசீர்வாத வாக்குத்தங்களை எண்ணி சந்தோஷப்படலாம். நம்முடைய சூழ்நிலைகள் எவ்வாறாக இருந்தாலும், எப்போதும் தேவனை துதிப்பதற்கென்று ஒரு காரணத்தை நம்மால் கண்டுபிடித்துக்கொள்ள முடியும்.

*சங் 78:21 ஆகையால் கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார்; அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போனதினால்,22 யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினி பற்றியெரிந்தது; இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கோபம் மூண்டது. 23 அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து,*

இஸ்ரவேலின் முறுமுறுப்பு நியாயமானது அல்ல. தேவன் எப்போதும் அவர்களுக்கு உண்மை உள்ளவராகவே இருந்தார். அவர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து, பாலைவனத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அவர்களை போஷித்தார். அவர்களது இருதயம்தான் இங்கு பிரச்சினை. தேவனுடைய உண்மை இங்கு பிரச்சினை அல்ல. **நன்றி இல்லாத ஒரு இருதயத்துக்கு எப்போதும் முறுமுறுக்க ஒரு காரணம் இருக்கும். நன்றி உள்ள ஒரு இருதயத்துக்கு எப்போதும் தேவனை துதிக்க ஒரு காரணம் இருக்கும்.**

## வல்லமையான துதி அசுத்த ஆவிகளை துரத்தும்

***1சாமு 16:23*** *அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினாலே வாசிப்பான்; அதினாலே பொல்லாதஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான்.* *( மாற்கு 1:32 )*

வல்லமையான துதியும் ஆராதனையும் அசுத்த ஆவிகளை விரட்டும். ***அப் 19:13-17*** ல் குறிப்பிடப்பட்டுள்ள படி, இயேசுவை உண்மையில் அறியாத ஒருவர் அசுத்த ஆவிகளை விரட்ட முயற்சிக்க கூடாது.

## துதி அற்புதங்களை கொண்டு வரும்

***அப் 16:25*** *நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.*

பவுலும் சீலாவும் இருந்த சூழ்நிலையில், நிச்சயமாக அவர்களால் ஜெபம் பண்ணவோ, தேவனை துதித்து பாடவோ உணர்வு இருந்திருக்காது. ஆனாலும் அவர்கள் தங்களுடைய இயற்கை உணர்ச்சிகளையும் மீறி, தங்கள் சித்தத்தை தேவனை நோக்கி துதிக்கும் படியாக மாற்றினார்கள். இப்படித்தான் நாம் விசுவாசத்தில் உறுதிப்பட முடியும் ***( கொலோ 2:7 ).*** இதன் முடிவு - இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் விடுதலை. வேதனையால் முறுமுறுப்பதை விட்டு, விசுவாசத்தால் துதித்தால் அதன் முடிவு தேவனுடைய அற்புதமான விடுதலை. அவர்களால் இது முடியும் என்றால் நம்மாலும் இது முடியும் ***( கொலோ 1:12 ).*** இங்கே நாம் காணும் இந்த நில நடுக்கம் இயற்கையாக நடந்தது அல்ல. அப்போஸ்தலரது ஜெபத்தினாலும் துதியாலும் விடுவிக்கப்பட்ட தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடு. நமக்கு தேவையான எந்த அற்புதத்தையும் அல்லது நில நடுக்கங்களையும் உருவாக்க போதுமான வல்லமை - துதி.

இங்கே நாம் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான காரியம், "ஒரு அற்புதத்துக்காக அல்லது விடுதலைக்காக மாத்திரம் இவர்கள் தேவனை துதிக்க வில்லை. வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும் தேவனை துதிப்பது அவர்களது வழக்கம். அப்படி துதித்தபோது அற்புதத்தை கண்டார்கள். இது விசுவாச வாழ்க்கையின் ஒரு முக்கிய பாடம் ***( மத் 6:33 ).*** நாம் ஒரு காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் தேவனை துதிக்கக்கூடாது. தேவனை துதிக்கும்போது எல்லா காரியங்களும் தானாகவே நடக்கும்.

## துதிப்பது நம்மை விசுவாசத்தில் வல்லவர்களாக ஆக்குகிறது

***ரோம 4:21*** *தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.*

துதிப்பதும் பெலனும் சமமானது என்று இயேசு ***மத் 21:16*** ல் சொல்லுகிறார். இங்கே இதுதான் ஆபிரகாமை விசுவாசத்தில் வல்லவனாக ஆக்கியது என நாம் காணலாம். துதிப்பது, நம் மனங்களை தேவன் மேலும் அவரது செயல்களின் மேலும் நிலைப்படுத்தி வைக்கும். ஒரே சமயத்தில் ஒரு பிரச்சினையின் மேல் மனதை வைத்துக்கொண்டு தேவனையும் துதிக்க முடியாது. அப்படி செய்ய முயற்சித்தால் நாம் குறை கூறுகிறவர்களாக ஆகிவிடுவோம். இப்படித்தான் துதி நம்மை விசுவாசத்தில் வல்லவர்களாக ஆக்குகிறது. ஆபிரகாம் எப்படி விசுவாசத்தில் வல்லவன் ஆனான் ? அவன் தன் சூழ்நிலைகளில் மனதை பதிக்காமல் தேவன் மேல் மனதை பதித்ததால். இதை எப்படி செய்தான் ? தேவனை துதித்ததன் மூலம் ( ***வசனங்கள் 19,21*** ).

## துதிப்பது நம்மை விசுவாசத்தில் உறுதிப்பட வைக்கிறது

***கொலோ 2:7*** *நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.*

நாம் ஸ்தோத்திரத்தில் ( நன்றியறிவித்தல் ) இயங்கும்போது, விசுவாசத்தில் உறுதிப்படுகிறோம். ஸ்தோத்திரம் இல்லாமல் விசுவாசம் முழுமையடைய முடியாது. நாம் ஒரு லட்ச ரூபாய்க்காக விசுவாசித்து அது கிடைத்தால் நமது பிரதிச்செயல் ஏதாவது ஒரு விதத்தில் ஸ்தோத்திரமாக இருக்கும். ஏதாவது துதி வெளிவராமல் நமது ஜெபத்துக்கான பதிலை பார்ப்பது முடியாத காரியம். ஏனென்றால் நன்றியறிவித்தல் விசுவாசத்தின் ஒரு முக்கியமான பகுதி. ஆகவே துதி இல்லாத விசுவாசம் முழுமையான விசுவாசம் அல்ல. ஒருவர் ஏதாவது ஒரு காரியம் தேவனிடம் கேட்டு, விசுவாசித்து, அதை பெற்றுக்கொள்வதற்கு முன்பாக ஒருவிதமான துதியும் ஸ்தோத்திரமும் இல்லாமல் இருக்கிறார் என்றால், அவர் மிக தாழ்ந்த நிலை விசுவாசத்தில் இயங்குகிறார் என்று பொருள். நமக்கு பதில் கிடைக்கு முன்பாகவே நாம் தேவனை ஸ்தோத்தரிக்கும்போது நமது விசுவாசம் உறுதிப்பட்டு அது மிக உயர்ந்த நிலையை அடைகிறது.

## துதிப்பது விக்கிரக ஆராதனையில் இருந்து நம்மை பாதுகாக்கிறது

***நீதி 3:5*** *உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,*
***6*** *உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*

***ரோம 1:21*** *அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய*

*இருதயம்இருளடைந்தது.*

*1கொரி 6:9 அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், 10 திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.*

சிருஷ்டியின் மூலமாக, தேவனைப்பற்றிய வெளிப்பாடு மனிதருக்கு கொடுக்கப்பட்டது என்று பவுல் சொல்லுகிறார். மனிதன் ஒளியை விட்டு இருளுக்கு சென்றதால் அவன் விக்கிரகாராதனைக்காரனாக ஆனான். *(ரோமர் 1:21-23 )* விக்கிரக ஆராதனை என்பது ' தேவனுடைய இடத்தை வேறு எதற்காவது கொடுத்து அதை ஆராதிப்பது '. பழைய ஏற்பாட்டில் இது அந்நிய தேவர்கள், விக்கிரகங்கள், உருவங்கள் *( உபா 32:37-38; நியா 10:14; எசே 14:6 )* போன்றவைகளாக இருந்தன. புதிய ஏற்பாட்டில் சுயத்தை அதிகமாக நேசிப்பது, இன்பத்தை நேசிப்பது, பொருளாசை போன்றவைகளும் விக்கிரக ஆராதனையில் சேர்க்கப்பட்டுள்ளன *( 2 தீமோ 3:2,4; எபே 5:5; கொலோ 3:5 ). 1யோவா 5:21 பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்.* இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனைக்கு விலகி நம்மை காத்துக்கொள்வதற்கான ஒரு சிறந்த வழி, நம்முடைய வழிகளில் எல்லாம் ஸ்தோத்திரத்தோடு, துதியோடு, மகிமைபடுத்தி தேவனையே நினைத்துக்கொள்வது. *( நீதி 3:5-6; ரோமர் 1:21 ).*

**இரட்சிப்பு என்னும் ஈவுக்காக நாம் தேவனுக்கு கொடுக்க முடிகிற ஒரே பிரதி உபகாரம் 'துதி'**

*2கொரி 9:15 தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.*

*சங் 116:12 கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். 13 இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.*

இரட்சிப்பு ஒரு **ஈவு** என வேதாகமம் சொல்லுகிறது *( எபே 2:8 ).* ஈவு என்ற வார்த்தையின் அர்த்தம் ' பரிசு'. ஒருவர் தானாகவே முன்வந்து ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் கொடுப்பது '. ஒருவர் நமக்கு ஒரு பரிசு தருகிறார் என்றால், நாம் திருப்பி செய்ய வேண்டியது " மிக்க நன்றி " என்று சொல்வதே. ஆனாலும் இரட்சிக்கப்பட்ட பல விசுவாசிகளும் தாங்கள் பெற்ற இரட்சிப்பு என்னும் ஈவுக்காக தாங்கள் கடுமையாக உழைத்து நன்றிகடனை செலுத்த வேண்டும் என முயற்சிக்கிறார்கள். இந்த சொல்லிமுடியாத ஈவுக்காக தேவன் எதிர்பார்க்கிற ஒரே பிரதிஉபகாரம் ஸ்தோத்திரத்தோடு, துதியோடு கூடிய நன்றியறிவித்தலே. *( 2 கொரி 9:15 ).* **இரட்சிப்பு என்பது பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு ஈவு *( ரோமர் 6:23 ),* சம்பாதிக்க வேண்டிய சம்பளம் அல்ல. இதற்காக நாம் கொடுக்க வேண்டியது எல்லாம் துதியும் ஸ்தோத்திரமும் மாத்திரமே.**

### சபை கூடிவரவில் துதி ஆராதனை

*கொலோ 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;*

ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லுவதற்கான வழிகளில் சில " சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள் ". வல்லமையான உபதேசம், போதனைகளைப்போல வல்லமையான துதி ஆராதனையும் சபையில் முக்கியமானதே. நாம் தேவனுடைய வார்த்தையில் இருந்து புதிய வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக, நம்முடைய இருதயங்களை துதி ஆராதனை வேளையில் திறப்போமானால், துதியும் ஆராதனையும் நமக்கு மிகுந்த உபயோகமாக இருக்கும். புதிய ஏற்பாட்டு வசனங்கள் எழுத்து வடிவத்தில் வருவதற்கு முன்பாக, சங்கீதங்கள், பாடல்கள், கீர்த்தனைகள் போன்றவைகள் கிறிஸ்தவ உபதேசத்தின் முக்கியமான கருவிகளாக இருந்தன. இன்றும் ஊழியத்துக்கான முக்கிய வழியாக அது இருக்கிறது. வேதாகம சத்தியத்தை தியானிக்க மீண்டும் நினைவில் கொண்டுவர இசை மிகவும் உதவியாக இருக்கும். ஒரு செய்தியை கேட்காத பலரும் இசையை கேட்பார்கள்.

*சங் 22:22 உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.*

துதிப்பது சமாதானத்தை கொண்டு வருகிறது. *பிலி 4:4-7.*

### வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் துதிக்கும் முறைகள்

1. பாடுவது. *சங் 30:4; 81:1; 95:1; எபே 5:19; கொலோ 3:16; யாத் 15:1; 1 சாமு 18; 2 சாமு 22.*

2. கெம்பீரித்தல். ஆர்ப்பரித்தல். *சங் 35:27; 98:4; லேவி 9:24.* ஆர்ப்பரித்தலும் சத்தமான பாடலும் துதியில் இணைந்திருக்க வேண்டும்.

3. ஆனந்த சத்தமிடுதல். ( மற்றவர்கள் கேட்கும்படியாக ) *சங் 66:8; 98:4-6.*

4. சிரித்தல். ( நகைத்தல் ). *சங் 126: 1-3; யோபு 8:21.*

5. ஸ்தோத்தரித்தல் ( நன்றியறிவித்தல் ). வேதாகமத்தில் துதியும் ஸ்தோத்திரமும் பல இடங்களில் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகள் இணைந்து செல்பவை. ஸ்தோத்திரம் உள்ள ஒரு இருதயமே துதிக்கும். *எஸ்றா 3:11; சங் 69:30; 100:4; எபே 5:19-20.*

6. எழுந்து நிற்பது. *உபா 10:8; 1 நாளா 23:30; நெகே 9:5; சங் 134:1.*

7. முழங்காற்படியிடுதல். *சங் 95:6; எபே 3:14; பிலி 2:10-11.*

8. கைதட்டுதல். *சங் 47:1, 98:8; ஏசா 55:12.*

9. நடனமாடுதல். *சங் 149:3; 150:4; செப்பனியா 3:17.* சத்தமிடுதல், ஆர்ப்பரித்தல், நடனமாடுதல் போன்றவை முறையாக செய்யப்பட வேண்டும்.

10. கரங்களை உயர்த்துதல். *சங் 63:4; 134:2; 1 தீமோ 2:8.*

11. அந்நிய பாஷையில் பேசுதல், பாடுதல். *அப் 10:46. 1 கொரி 14:2; 14:15.*

12. இசைக்கருவிகளை உபயோகித்து. *2 சாமு 6:5;சங் 150.*

இவைகள் எல்லாம் வேதாகமத்தில் எடுத்துக்காட்டுகளோடு சொல்லப்பட்டிருக்கும் கட்டளைகள். இவைகள் அனைத்தையும் நாம் செய்ய வேண்டும். நமக்கு பிடித்தமான ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு மற்றவற்றை ஒதுக்கிதள்ளுவது வேதாகமத்தின் படி சரி அல்ல.

## துதிக்கும் ஆராதனைக்கும் உள்ள தொடர்பு

**துதிப்பது என்பதை தேவனை தேடுவது. ஆராதனை என்பது தேவன் நம்மை கண்டுபிடிப்பது.**

**துதிப்பது நாம் தேவனை தேடுவதற்காக செய்வது. ஆராதனை நாம் அவரது பிரசன்னத்தில் செய்வது.**

**துதிப்பது ஒரு விசுவாசக்கிரியை. ஆராதிப்பது தேவனுக்குள் இளைப்பாறுவது.**

துதியின் குறிக்கோள், தேவனுக்கு பிரியமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது. தேவன் உண்மையாக ஆராதிப்பவர்களை நேசிக்கிறார். உண்மையாய் ஆராதிப்பவர்கள் தேவனோடு இருக்க பிரியப்படுவார்கள். நாம் தேவனை துதித்து, ஆராதனைக்குள் கடந்து செல்லும்போது, ஆராதனையில் தேவனோடு தொடர்பு கொண்டு உறவு கொண்டு இருக்கும்போது , நமக்கு தேவையான அனைத்தும் - சந்தோஷம், நிம்மதி, வல்லமை, வெற்றி, கருணை, ஞானம், உற்சாகம், பாதுகாவல், ஆனந்தம், ஓய்வு - ஆராதனையில் இருக்கின்றன.

*சங் 16:11 ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.*

*சங் 21:6 அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.*

*மத் 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.*

பலவருடங்கள் நாம் சிரமப்பட்டு தேடுவது அனைத்தும் தேவனை தேடுவதால் கிடைக்கும்.

*சங் 9:10 கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.*

நீங்கள் தேவனை துதிக்கும்போது - முழு இருதயத்தோடு அவரை தேடும்போது ... *( சங் 42:1,2 ),* நீங்கள் தேவனை துதிக்கும்போது - மனந்திரும்புதலோடு அவரை தேடும்போது ... *( யோசுவா 24:15 ),* நீங்கள் தேவனை துதிக்கும்போது - தாழ்மையோடும், நம்பிக்கையோடும் அவரை தேடும்போது .... *( சங் 9:10 ),* நீங்கள் துதியின் குறிக்கோளாகிய ஆராதனையை அடைவீர்கள். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட பிரசன்னத்தில், அவரை மகிமைப்படுத்தி, அவரை உயர்த்தி, முழு தாழ்மையோடு பணிந்து, அவரில் அன்பு கூர்ந்து, அவரால் அன்பு கூரப்பட்டு..... ஆராதனைக்குள் இருக்கும்போது, மற்ற அனைத்தும் மௌனம் சாதிக்கும்.

*ஆப 2:20 கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.*

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிசுத்தவான்களே ! நீங்கள் சுவாசிக்கும்போதே தேவனை துதித்து தொழுது கொள்ளுங்கள். **அவர் அதற்கு தகுதி உள்ளவர். நீங்கள் அதற்காக சிருஷ்டிக்கப்பட்டவர்கள். துதியும் ஆராதனையும் உங்களை மாற்றும், உங்கள் தேவனை மகிமைப்படுத்தும், பிசாசை விரட்டும், உங்கள் தேவனுக்கு ஒரு பிரியமான சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுக்கும்.**

ஆமென்.

**சகோ. D.வெர்ஜின் குமார்**

If you need any clarifications or if you have any doubts and observations kindly contact me at deeveekumar@yahoo.com , Ph; 00968 25572195, 99663557. I will reply you.

**Resources:** Dakes Bible Commentary, Andrew Wommack Bible Commentary, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible concordance, Vincent's Word Studies in the New Testament, The power and purpose of Praise and Worship – by Myles Munroe. All Bible quotes are from King James Version. In the Tamil Bible some verses may appear before or after the quoted references.

-----------------------------------------------